இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 02 | திகதி : 05.02.2023 | விலை : 50.00

## மனித வள மேம்பாட்டுக்கல்வி முறையினால் மட்டுமே ஒரு சமூகம் அபிவிருத்தியடைய முடியும்

### அல்லைப்பிட்டி மொன்பேட் பன்னாட்டுப் பாடசாலைத் திறப்பு விழாவில் சபையின் தலைவர் அருட்சகோ. ஜோண் கலராக்கல் தெரிவித்தார்



யாழ். மறைமாவட்டத்தில் முதலாவது பன்னாட்டுப் பாடசாலை மொன்பேட் அருட்சகோதரர்களால் அல்லைப்பிட்டியில் ஸ்தாபிக்கப்பட்டுக் கடந்த 31.01.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு விழாவில் பிரதம அதிதியாக உரோமாபுரியிலிருந்து வருகை தந்து கலந்து கொண்ட மொன்பேட் துறவற சபையின் தலைவர் அருட்சகோ. ஜோண் கலராக்கல் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுதாயத்தில் தரமான கல்வி என்பது பெற்றோரின் பங்களிப்புடனேயே சாத்தியமாகும். கல்வி நிறுவனங்கள் ஐம்பது வீதம் உருவாக்கத்தை மட்டுமே கொடுக்க முடியும். பெற்றோர், பிள்ளைகள் மீது காட்டும் அக்கறை, அன்பு, உளவள உருவாக்கம் என்பன இணையும் போதே நூறு வீதக் கல்வி மேம்பாட்டைப் பிள்ளைகள் அடைவர். ☞ 02

## இறுதிப்போரில் சேதமுற்ற புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தை புதிதாக நிர்மாணித்துத் திறந்து வைத்தார் யாழ். ஆயர்



புதுக்குடியிருப்புப் பங்கில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த புனித சூசையப்பர் ஆலயத் திறப்பு விழா நிகழ்வு கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து அழகிய தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். ☞ 02

## குருநாகலில் தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல்



78வது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் தலைமைத்துவப் பயிற்சி கடந்த 20. 21.22ஆம் திகதிகளில் குருநாகல் மறைமாவட்டத்தின் பன்னல பிரதேசத்தில் அமைந்துள்ள Pope Francis' Integral Human Formation நிலையத்தில் நடைபெற்றது.

தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்தந்தை கலன பீரிஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய கத்தோலிக்க இளையோர் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான ஆயர் பேரருட்கலாநிதி அன்ரன் ரஞ்சித் அடிகளும் மற்றும் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர்களுடன் 100க்கும் அதிகமான இளையோர்களும் கலந்து கொண்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள் குழுச்செயற்பாடுகள் என்பவற்றுடன் தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றியச் செயற்குழுவிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதன்போது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றியத் தலைவராக மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த செல்வன். ஹென்றி யூலியன் அவர்களும் செயலாளராக யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் இராசநாயகம் கஸ்ரோ அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பதுளை மறை மாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமனம்



பதுளை மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட்பணி ஜீட் நிஷாந்த சில்வா அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப் பட்டுள்ளார். பதுளை ஆயர் பேரருட் கலாநிதி வின்சன்ட் பெர்னாண்டோ ஆண்டகை ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே இப்புதிய ஆயர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அருட்பணி ஜீட் நிஷாந்த சில்வா அடிகள் திருச்சபைச் சட்டவியலில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றவர். தற்போது கரித்தாஸ் மறைமாவட்ட இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார்.

## மக்கள் ஒற்றுமையாக வாழ்வதை அரசியல்வாதிகள் விரும்புவதில்லை

### – யாழ் ஆயர்




இலங்கை நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமையாக வாழ விரும்புகின்றார்கள். அதற்காக ஏங்குகின்றார்கள் ஆனால் எமது அரசியல்வாதிகள் இப்படியான நல்லவை நடக்க இடமளியார். அவர்கள் தங்களுக்குள்ளே பிரிந்து நின்று பிரச்சனைகளை அதிகரிக்கின்றார்களென மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அருட்பணி டேவிட் கட்டத்திறப்பு விழாவில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார். ☞ 02

## பல்கலைக்கழப் பேரவை உறுப்பினர்களாக யாழ்.மறைமாவட்டக் குருக்கள் இருவர்



யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக புதிதாக 14பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளும் யாழ். மறைமாவட்டக் குருவும் வாழ்நாள் பேராசிரியருமான அருட்தந்தை பிலேந்திரன் அடிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக் காலம் கடந்த ஜனவரி 15 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி முதல் தொடர்ந்துவரும் மூன்று வருடங்களுக்கு இவர்கள் வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களெனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# அல்லைப்பிட்டி மொன்பேட் பன்னாட்டுப் பாடசாலை




## மனித வள மேம்பாட்டுக்கல்வி முறை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ். ஆயரின் அழைப்பை ஏற்று யாழ் மறைமாவட்டத்துக்கு வருகை தந்து கல்விப்பணியாற்ற இறைவன் தந்த வாய்ப்புக்கு நன்றி கூறுவதாகவும் எல்லாக் கண்டங்களிலும் விரிந்து பரந்து கல்விப்பணி செய்யும் தம் துறவற சபை நிறைவான கல்விப் பணியை யாழ் மக்களுக்கு வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தனது நீண்டநாள் கனவு நிறைவு கண்டதாக எடுத்துரைத்தார். பலமுறை பலர் வழியாகப் பன்னாட்டுப் பாடசாலை ஒன்றை யாழில் ஆரம்பிப்பதற்குப் பல முயற்சிகளை எடுத்தபோதும் மொன் பேட் சபையினரே முன்வந்து இப்பணியை ஏற்று ஆதரவு தந்து பிரமாண்டமாகப் பன்னாட்டுப் பாடசாலை ஒன்றைக் கட்டியமைத்து தம் கல்விப்பணியை ஆற்றத்தொடங்கியமைக்குத் தமது நன்றிகளைத் தெரிவித்தார்.

இத் திறப்புவிழாவில் இச்சபையின் திருச்சி மாகாணத்தலைவர் அருட்சகோதரர் முனைவர் இருதயம் உட்பட இந்தியாவிலிருந்து ஆறு மாகாணத் தலைவர்களும் கலந்து சிறப்பித்தனர். சில ஆண்டு காலமாக அல்லைப்பிட்டியில் தங்கி இருந்து இம்மாபெரும் பணிப்பொறுப்பை ஏற்றுக் கட்டுமானப்பணிகள் முதல் அனைத்துப் பணிகளையும் முழு மூச்சாகப் பல தியாகங்கள் அர்ப்பணத்துடன் செயற்பட்டு உழைத்த அருட்சகோதரர்கள் மரிய பிரகாசம், ஜேக்கப், கபிரியேல் மற்றும் குளுனி அருட்சகோதரிகள் ஆகியோரை யாழ். மறைமாவட்ட ஆயர் குருக்கள் துறவியர் இறைமக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைக்கூறி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# துயர் பகிர்கின்றோம்


யாழ். மறைமாவட்டக் குருவும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உருவாக்குநராகப் பணி யாற்றும் அருட்பணி T.யேசுதாசன் சந்திரன் அடிகளா ரின் அன்புத் தாயார் **திருமதி ஞானம்மா தொம்மையப்பு** அவர்கள் கடந்த 17.01.2023 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## மக்கள் ஒற்றுமையாக....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

19ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை பாடசாலை முதல்வர் திரு. சுவைனஸ் அவர்களின் தலைமையில் அருட்தந்தை டேவிட் அவர்களின் வழிநடத்தில்நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் புதிதாக அமைக்கப்பட்ட அருட்பணி டேவிட் கட்டடத்தினையும் ஆசிர்வதித்துத் திறந்து வைத்து அங்கு ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் திரு T. ஞானசுந்தரன் மற்றும் வடமாகாண பிரதிக் கல்வி பணிப்பாளர் திரு து. அன்ரனி ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் மற்றும் நூலகம், யாழ். மறைமாவட்ட ஆயரின் பெயர்கொண்ட கணனிக்கூட திறப்பு நிகழ்வுகளுடன் புனித பேதுருவானவர் சிறப்புப் பாடல் இறுவட்டு வெளியீடும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ்.பேராலயத்தில்....



# “இயேசு உம்மை அவரது மறைத்தூதராக அழைக்கின்றார்” எனும் கருப்பொருளில் திருப்பாலத்துவ சபை தினம்

திருப்பாலத்துவ சபை தினம் 29ஆம் திகதி ஞாயிறுக்கிழமை “இயேசு உம்மை அவரது மறைத்தூதராக அழைக்கின்றார்” எனும் கருப்பொருளில் இலங்கைத் திரு அவை முழுவதும் கொண்டாடப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தில் அனைத்துப் பங்குகளிலும் திருப்பாலத்துவ சபை தினம் அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் குருமுதல்வர் தலைமையில் நடைற்ற சிறப்புப் திருப்பலியில் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை எயின்சிலி றொஷான் அடிகளாரின் வழிநடத்தலில் 50க்கும் மேற்பட்ட சிறார்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

பரந்தனில்....



பளையில்.....



கிளிநொச்சியில்.....



ஊர்காவற்றுறையில்...



நாரந்தனையில்....



சக்கோட்டையில்...



ஆனைக்கோட்டையில்...



முல்லைத்தீவில்....



## இறுதிப்போரில் சேதமுற்ற ....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வன்னியில் நடைபெற்ற இறுதிப்போரின் நிறைவில் இவ்வாலயம் முற்று முழுதாக அழிவுற்ற நிலையிலிருந்தது. மக்களின் மீள் குடியேற்றத்தின் பின் இவ் வாலயத்திற்கான அடிக்கல் ஒய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 2013 ஆம் ஆண்டு நாட்டி வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆலயக் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுப் பலரின் அயராத முயற்சியினால் இவ்வாலயம் கட்டப்பட்டு இறை நம்பிக்கையின் அடையாளமாக உயர்ந்து நிற்கின்றது.

# காவலன் கலசம்

## திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு - 29.01. 2023.

# இயேசு உம்மை அவரது மறைதூதராக அழைக்கின்றார்

### திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனரின் செய்தி

2023ம் ஆண்டு திருப்பாலத்துவ மறைபரப்பு ஞாயிறு கருப்பொருளின்படி எங்கள் அனைவருக்கும் உரிய முதன்மையான கடமை என்னவெனில் அனைத்துச் சிறுவர்களையும் எல்லையற்ற விதமாக அன்பு செய்யும் இறைவனுக்கு சாட்சி பகர்ந்துவாழ ஊக்குவிப்பதாகும். இச்செயற்பாடானது முதலில் எம்மைச் சூழவுள்ளவர்கள் மத்தியில் ஆரம்பிக்க வேண்டும். மேலும் அனைத்துச் சிறுவர்கள் மீதும் அக்கறையும் அன்பும் கொண்டு அவர்களுக்காகச் செபிக்கத் தூண்டுதல் வேண்டும். எம் பணியின் சாட்சியமானது ஒத்த வயதினருக்கு முன்மாதிரியாகவும் எம் செயற்பாடானது சமூகத்தில் வாழும் அனைவருக்கும் செய்தியாகவும் அமைய வேண்டும்.

'என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்' (மத்.4:19) இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ்வதன் மூலம் நாங்கள் மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாறுகின்றோம். 'இயேசு உம்மை அவரது மறைத்தூதராக அழைக்கின்றார்' என்னும் கருப்பொருளை எடுத்து நோக்கின் வாழ்ந்து வரும் குழந்தை எவ்வாறு கதைப்பதற்கு முயற்சிக்கும் போது முதல் வார்த்தையாக 'அம்மா' என்று உச்சரிக்கின்றதோ அதேபோன்று கிறிஸ்தவ சூழலில் பிறந்த குடும்பமும்



ஒவ்வொரு குழந்தையும் 'இயேசு' என்னும் வார்த்தையை உச்சரிக்கக் கற்றுக்கொள்கின்றது. இது யாருடைய வற்புறுத்தலாலோ அல்லது நிர்ப்பந்தத்தாலோ அல்ல, மாறாக திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஆன்மீகக் கொடையாகும்.

'நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலகம் முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்' (மத். 28:20) இறைவனோடு இணைந்திருந்தால் சாத்தியமற்றவையும் சாத்தியமாக மாறும் என நாம் விசுவசிக்கின்றோம். எனவே எமது பாப்பரசர் பிரான்சிஸ் எம்மிடம் கேட்கின்றார் 'மந்தைகளின் மணத்தை வெளிப்படுத்தும் பொருட்டுத் திருஅவைக்கு முழுமையாக அலங்கரிக்கப்பட்ட மனிதகுலத்தின் புதிய பார்வையை இறைவன் வெளிப்படுத்தியுள்ளார். (மீட்பின் நற்செய்தி)

திருஅவையின் மேம்பாட்டிற்காகத் தூய்மையான வாழ்வை வாழ வது அனைத்து விசுவாசமுள்ள கத்தோலிக்கர்களின் பொறுப்பாகும். (தி.ச.210) இயேசுவ- உணரும் கிறிஸ்தவளாக கிறிஸ்தவனாக மகிழ்வுடன் பணிபுரிய இறைவனிடத்தில் ஆசி வேண்டுங்கள்'.

உண்மையில் யார் இந்த மறைத்தூதர்கள்? இறைவனால் படைக்கப்பட்டு அவருடைய மறை யுண்மைகளை அனுபவமாக்கிக் கொண்டவர்கள். 'தற்போது வாழும் மறைத்தூதர்களும் இவ்வாறான ஆழமான அனுபவத்தை ஆயுதமாக்கிக் கொள்வர்களாயின் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் நம்பிக்கைக்குரிய விருட்சமொன்றைத் தமதாக்கிக் கொள்வார்கள்.

விசுவாசத்தின் விதைகளை 'ின் பணிகளில் பங்கேற்பதன் மூலம் திரு அவைக்கு விசுவாசமுள்ளவர்களாகப் புனித வாழ்வு வாழ அழைக்கப் படுகின்றோம். நற்செய்தி அறிவிப்பு திருமுழுக்கின் மூலம் தொடங்குகின்றது.

இறைவார்த்தைக்கு சான்று பகரும் வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றோம். மறைத்தூதுப் பணிக்கான உடனடித் தேவை இயேசு வின் சீடர்கள் மூலமாகவும் அவர்களின் உயிர்த் தியாகங்கள் மூலமாகவும் புத்தாக்கம் பெற்றது.





இப்புதுவாழ்வு இறைவனிட மிருந்து பெற்றுக் கொண்ட பரிசு. எனவே இந்த வருடம் இன்று நாம் கொண்டாடுகின்ற திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு விழாவின் மூலம் இயேசு எம் சிறுவர்களை மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு பெருந்தன்மையுடன் ஒன்றித்து வாழ அழைக்கின்றார்.

---

### அர்த்தமுள்ள ஆன்மீகம்

# நலம் தரும் நம்பிக்கை

பகுதி 05

கடந்த பகுதியில் ஆபிரகாமின் நம்பிக்கை ஆண்டவரால் நீதியாகக் கருதப் பட்டதையும் தளர்ந்து, சிதைந்து, திசை மாறிப்போகின்ற நமது இன்றைய நம்பிக்கையையும் பார்த்தோம். இன்று அன்பின், இரக்கத்தின் அடையாளமான ஆண்டவர் நம்மோடு இருப்பதை உணராத நாம், யோசேப்பு எப்படி இறையுறவோடு வாழ்ந்து உயர்ந்தார் என்பதைப் பார்ப்போம். செயலற்ற நம்பிக்கை பயனற்ற நம்பிக்கை என்று திருத்தூதர் யாக்கோப்பு குறிப்பிடுவது போல் தனது இளவயது வாழ்க்கையை, செயல் வடிவில் வாழ்ந்து, உயர்ந்தவர் யோசேப்பு.

ஈசாக்கின் மகனான யாக்கோப்பு தனது மூத்த சகோதரன் ஏசாவுக்குத் தெரியாமல் தலைமகன் உரிமையைத் தவறான முறையில் பெற்றுக்கொள்கிறார். யாக்கோப்பு வளர்ந்து திருமணமாகி 12 ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார். அதில் இளையவனே யோசேப்பு. இறைத் திட்டத்தின்படி தெரிந்துகொள்ளப்பட்ட யோசேப்பு சிறு வயது முதலே எதிர்காலம் குறித்த கனவுகளைக் காண்பதில் வல்லவராய் இருந்தான். யாக்கோப்பின் மிக அன்பிற்குரியவரான இவர், தான் கண்ட 12 விண்மீன்கள், மற்றும் 12 நெற்கதிர்க் கட்டுக்கள் பற்றிய கனவுகளைக் கூறியதனூடாக சகோதரர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு, பாழும் கிணற்றில் தள்ளப்படுகிறார். பின்பு ஓரிரு சகோதரர்களின் தூண்டுதலினால் சாவிலிருந்து மீட்கப்படுகிறார். 11 சகோதரர்களும் யாக்கோப்பிடம் அவரது உடைகளைக் காண்பித்து, விலங்கு ஏதோ கொன்றுவிட்டதென்று பொய் கூறுகிறார்கள். இதனால், யாக்கோப்பு என்றும் அனுபவிக்காத துன்பத்தை அனுபவிக்கிறார்.

இந்நிகழ்வானது பார்ப்பவர்களுக்குத் தலைமகன் உரிமையைத் தவறாகப் பெற்ற யாக்கோப்புக்கான சாபம்போலத் தென்பட்டாலும், இதற்குப் பின்னால் இருக்கின்ற இரக்கத்தின் பொழிவு ஆச்சரியம் மிக்கதாய் அமைகிறது. எகிப்து நாட்டுக்குக்கொண்டு செல்லப் பட்ட யோசேப்பு எகிப்தியத் தலைவனின் இல்லத்தில் வாழ்ந்து அவரது தயவால் மேலாளர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார். "ஆண்டவர் அவரோடு இருந்து அவர் தொட்ட செயல்களைத் துலங்கச் செய்தார்". (தொ.நூ.39:3).

இந்நிலையில் தலைவரின் மனைவி போத்திபார் அவரது இளமையிலும் உடற்கட்டிலும் மயங்கி அவரைத் தகாத உறவுக்கு வற்புறுத்துகிறாள். அவர் உடன்படாததால் அவர் மீது வீண் பழி போட்டுச் சிறைக்கு அனுப்புகிறாள். சிறையிலும் தனது தூய, கீழ்ப்படிவான வாழ்வால் அனைவரையும் கவர்கிறார். பலரின் கனவுகளுக்கு விளக்கமளித்த அவர், பார்வோனின் கனவுகளுக்கும் "நானல்ல, கடவுளே பார்வோனுக்கு நலமிகு மறுமொழி தருவார்" (காண்.தொ.நூ.41:38) என்று, இறை நம்பிக்கையோடும் பணிவோடும் விளக்கமளிக்கிறார். பார்வோன் இறை ஆவியைப் பெற்ற இவரைப்போல் வேறெவரையும் காணமுடியுமோ என்று கூறி, எதிர்காலத்திற்குரிய எகிப்தின் ஆளுநராக நியமிக்கிறார்.

பதவியைப் பெற்றுக்கொண்ட யோசேப்பு பதவி மோகம், செல்வச் செருக்கு, ஆடம்பர வாழ்வு, அகம்பாவம் போன்றவற்றிற்கு இடங்கொடாமல் பஞ்ச காலத்தின் செயற்பாடுகளைத் துல்லியமாக மனதிற்கொண்டு, செயற்பட்டு, பஞ்சத்தின் போது தேடிவந்த அனைவருக்கும் அன்பும் பரிவும் காட்டினார். தம் சகோதரர்கள் பஞ்சத்தில் உதவி தேடி வந்தபோது தனக்கு அவர்கள் செய்த தீமையையும் பாராமல் அவர்களை அன்போடு உபசரித்துத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

அவர்கள் யோசேப்புக்குத் தாம் செய்தவற்றிற்காக மனம் வருந்தியபோது, இது உங்கள் செயலல்ல, உயிர்களைக் காக்கும் பொருட்டு இறை மீட்பின் செயல். அதற்காகவே கடவுள் என்னை எகிப்துக்கு அனுப்பி ஆளுநராக நியமித்துள்ளார் என்று அவர்களைத் தேற்றுகிறார்.

இறுதியில் தந்தையான யாக்கோப்புடன் அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்வதைப் பார்க்கிறோம். இந் நிகழ்வுகள் அனைத்தும் இறைத் திட்டத்தின் விளைவுகள் என்ற யோசேப்பின் உறுதியான நம்பிக்கையே இந்த மாற்றங்களுக்குக் காரணமாகும்.

இந்த வரலாற்றிலிருந்து பல நடைமுறை உண்மைகளை நாம் கற்றுக் கொள்ளவேண்டும். யாக்கோப்பு தலைமகன் உரிமையைத் தவறாகப் பெற்றது போல் இன்றும் பட்டம், பதவி, சொத்து, சுகங்களைத் தவறாகப் பெறுகின்ற மக்களாக, அடுத்தவன் உரிமையைத் தட்டிப் பறிக்கின்ற மக்களாக, நம்மில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இளைஞர் முதல் பெரியவர் வரை ஊனியல்பின் இச்சைகளுக்கும் காமவெறிக்கும் இடங் கொடுத்துப் பாவத்தில் வீழ்ந்துவிடுகிறோம். பட்டம், பதவி வருகின்றபோது, ஆணவமும் அதிகார வெறியும் கொண்டு, அடுத்தவரை அடக்கி ஆளமுயற்சிக்கிறோம்.

செல்வமும் பொருளும் சேர்கின்ற போது அவற்றைப் பதுக்கிவைத்து, அடுத்தவன் பசிக்குத் தீனிபோட மறுப்பவர்களாக, கொள்ளை இலாபம் அடிப்பவர்களாக, சமூக சிந்தனையற்றவர்களாக மாறிவிடுகிறோம். அறியாமல், தெரியாமல் ஒருவர் செய்த செயலை மன்னிக்க முடியாமல், சினமும் சீற்றமும் கொண்டு, சகோதர எண்ணம் சிறிதும் இன்றிப் பழிவாங்க நினைக்கிறோம். சாகும்வரை வேண்டாதவராகக் கணிக்கின்றோம்.

யோசேப்பின் வாழ்விலிருந்து தூய பண்புகளைக் களைந்து, தூய வாழ்வு வாழ்ந்து, மேன்மை பெறுகின்ற மனோநிலை நமக்குள் வருமா? இதனைப் பெற நமக்குத் தேவைப்படுவது நம்பிக்கை என்ற ஒரு புள்ளி மாத்திரமல்லாமல் அது தாங்கிநிற்கும் ஊக்கமான நற்செயல்களோடு பயணிப்பதும் தான். எனவே, நம்பிக்கைகளை நல்ல செயல்களில் காட்டி இறைவனுக்கும் அயலவருக்கும் உகந்த நல்ல மக்களாக ஒளி வீசுவோம். நலம் தரும் நம்பிக்கையின் அடுத்த படியில் சந்திக்கும்வரை...

அருட்பணி மா.ரேஜிஸ் இராசநாயகம்

# காவலன் கலசம்

# யாழ் ஆயர் பேரருட்திரு யஸ்றின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தனித்துவமான கல்விப்புலப் பங்களிப்பு

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**9. யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்:**

இவரது கல்விப்புல ஆற்றலை அடையாளம் கண்ட யாழ்பல்கலைக் கழகமானது ஆயர் அவர்களை மூதவையின் அங்கத்தவராக உள்வாங்கிக் கொண்டது. இவரைப் பதினைந்து ஆண்டுகளாக இப்பணியில் தொடர்ந்து அமர்த்தியதிலிருந்து அங்கு இவரது பங்களிப்பின் முக்கியத்துவத்தை மதிப்பிட முடியும். அங்கு இவர் கூறும் கருத்துகளை ஏனைய அங்கத்தவர்கள் மாத்திரமன்றி அரசியல்வாதிகளும் செவிமடுத்தனர். பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இவரைத் தேடி ஆயர் இல்லம் வருவது காணக்கூடிய ஒன்று. மூதவையின் அங்கத்தவராக அருள்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளாரை நியமனம் செய்ததில் இவரது பங்களிப்பு உண்டு. அத்தோடு கிறிஸ்தவ நாகரீகத் துறைக்கு ஆற்றலுள்ள துறைத் தலைவராக அருட்பணி போல் றொகான் அடிகளாரை நியமித்தமை மிகவும் பயனுள்ள ஒரு நியமனமாக விளங்குகின்றது. அங்கு கிறிஸ்தவ நாகரீகத்துறையில் முதுமாணிப் பட்டப்படிப்பு உருவாகவும் இது வழிவகுத்தது. பல்கலைக் கழகச் சமூகத்தோடு இன்றுவரை ஆயர் அவர்கள் நல்லுறவைப் பேணி வருகின்றமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

**10.குருக்களின் உயர்கல்வி:**

ஆயர் தனது குறுகிய காலப் பணியின்போது பல குருக்களை உயர் கல்விக்கு அனுப்பி உருவாக்கியமை ஒரு நீண்டகால நோக்குக் கொண்ட சிறந்த ஒரு செயலாக அமைகின்றது. முதுமாணி, முனைவர் நிலைப் படிப்புக்காகப் பல குருக்களை உரோமாபுரிக்கும் இந்தியாவுக்கும் அனுப்பி உருவாக்கி வருகின்றார். மறைமாவட்டத்திற்கு அறிவுத் திறன்கொண்ட குருக்கள் இருப்பது குருமட மாணவர்களின் உருவாக்கத்திற்கு மாத்திரமன்றி, இறையியல் கல்லூரி, மறைக்கல்வி நிலையம், பல்கலைக் கழகம் போன்றவற்றிலுள்ள மாணவர்களின் வளர்ச்சிக்கும் அவசியமானது என்பதைக் கருத்திற் கொண்டு ஆயர் இவ்வாறு செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது. மெய்யியல், இறையியல் துறையில் மாத்திரமன்றி தமிழ்துறையிலும் குருக்கள் அறிஞர்களாகவரவேண்டும் என்பது இவரது இலட்சியக் கனவுகளில் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.

**அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்**

**11. மாணவர்களை உருவாக்கும் திறன்:**

பாடசாலை மாணவர்களை உருவாக்கி நல்ல நிலைக்கு இட்டுச் செல்லும் இவரது ஆற்றல் தனித்துவமானது. அதன் தொடர்ச்சியை ஆயர் தற்போது குருக்களைப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்து உயர்கல்விக்கு அனுப்பி வைப்பதில் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்களில் காணப்படும் திறமைகள் எவை? எந்தத் துறையில் இவர் சிறந்து விளங்குவார்? எந்தத் துறை இவருக்கு பொருத்துமற்றது? என்பதை எடைபோட்டுப் பொருத்தமான துறையில் நெறிப்படுத்தி அவர்களை உயர்ந்த நிலைக்குப் பொருத்தமாக உருவாக்குவார். பாசமும் கண்டிப்பும் நிறைந்த உருவாக்கும் முறை நல்ல பயன்களை விளைவித்துள்ளமை அனுபவ உண்மையாகும். இவர் அதிபராக இருந்த காலத்தில் மேற்கொண்ட சிறந்த உருவாக்க முறையினால் பலர் இன்று உலக நாடுகளிலும் இலங்கையிலும் உயர் பதவி வகித்து வருகின்றமை இவரது உருவாக்கல் திறமைக்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றது. இவருடைய உருவாக்கத்தை எண்ணி இவரது மாணவர்கள் இன்னமும் அவருக்கு நன்றி நிறைந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஆயரின் முக்கிய நாட்களில் வந்து ஆயரைச் சந்திப்பதும் மறைமாவட்டப் பணிகளுக்கு நிதிப் பங்களிப்புச் செய்வதும் இன்றும் நடைபெற்று வருகின்றது.



**நிறைவாக:**

ஆயர் இறைவன் அளித்த தனது கல்வி ஆற்றல் மூலம் வழங்கிவரும் பங்களிப்பு நமது சமுதாயத்தில் கல்வியிலும், ஆளுமை விருத்தியிலும் பல நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவதோடு தொழில் வாய்ப்புக்கான திறவு கோலாகவும் அமைந்து வருகின்றமை பாராட்டுக்குரியதே. தான் சந்திப்போரது பெயர்களை நினைவில் பதித்து வைக்கும் இவரது ஆற்றல் வியக்கத்தக்கது. தனது பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களை நன்கு அறிந்து வைத்திருந்தார். அவர்களைத் தட்டிக்கொடுத்து உருவாக்கி வந்துள்ளார். அவர்களை இன்னமும் நேசித்து வருகின்றார் என்பது கண்கூடு.

# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.



**பண்பாட்டு மயமாக்கல் முயற்சிகள்**

திருவழிபாடு, திருஆட்சி, மறையறிவிப்பு, மறைப்பணி தொடர்பான அனைத்து விடயங்களிலும் இடம்பெற்ற சுதேச பண்பாட்டின்படி கத்தோலிக்க மறையுண்மைகளை அறிவிக்க ஊக்கிகளாக அமைந்த மாற்றங்களும் புனரமைப்புகளும் "மாற்றியமைத்தல்" என்னும் பதத்தால் குறிக்கப்பட்டது.

ஆயினும் கத்தோலிக்க மறை அந்நியமாக நோக்கப்பட்ட பார்வை மறைந்து, யாழ். மண்ணின் பண்பாட்டில் இணைந்த "நற்செய்தி" யாக நோக்கப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளையும், மாற்றியமைத்தல் என்னும் பதத்தால் முழுமையாகக் குறிப்பிட்டு விட முடியாது.

அதேவேளை 1960 முதல் தொடர்ந்து இன்று வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும், மாற்றியமைத்தல் என்னும் பதத்திற்கு அப்பால் விரிவாக்கம் செய்து குறிப்பிடவும் முடியாது.

இதன்படி அக்காலத்தில் திருவழிபாட்டு மொழிமாற்றம், மறையறிவு முறை மாற்றம் (திரிதெந்தீன் சங்கக் கேள்வி பதில், மறைக்கல்வி முறையிலிருந்து 02ஆம் வத்திக்கான் பொதுச்சங்க மனிதமைய, உளவியல், சமூக, இறையியல் ஆன்மீக முறைக்கான மாற்றம்), வீடுகளில் அல்லது மக்களின் வசதிக்கேற்ப வீடுகளுக்கு அண்மையான பொது இடங்களில் இல்லத் திருப்பலி நிறைவேற்றுதல், நூல்களின் மொழிபெயர்ப்பு, திருவழிபாட்டுக்கான தமிழிசைப்பாடல்கள் அறிமுகம், திருமணத்தில் தாலி, கூறை, மாலை, பொட்டு (சந்தனம், குங்குமம்) உபயோகித்தல் போன்றவற்றின் அறிமுகம் இடம்பெற்றன. ஆலயத்தில் திரை இழுத்துத் திருப்பலி தொடங்கியவேளை முன்பு பாடப்பட்ட விருத்தப்பாக்கள், கவிகள், தவக்காலத்தில், சிந்தாகுலத் திரட்டு, நடுத்தீர்வை உலா, ஒப்பாரி, அந்தாதி, தேர், சொரூபக் கூடு, சப்பறம் (போர்த்துக்கேயர் கால அறிமுகம்) கூத்து, வாசாப்பு (வாசகப்பா) போன்றவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டாலும் பல ஒழுங்கீனங்கள், போட்டி பொறாமைகள், இரத்தக் களரிகள், வழக்குகள், சிறை செல்லல், காரணமாக (எதிர்காலத்தில் இல்லாமற் போய்விடுமோ என்ற கவலையிருந்தாலும்) இவற்றைத் தடைசெய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆயர் உள்ளானார். ஆலய விழாக்களின் போது வரவேற்பு நிகழ்வுகளுக்கு ஆராத்தி செய்தல் மற்றும் தைப்பொங்கல் போன்ற தமிழர் விழாக்களைக் கொண்டாடுவதும் பல இடங்களில் எதிர்ப்புக்கள் இருந்தாலும் ஒருசில இடங்களில் முன்னெடுக்கப்பட்டன. மாற்றியமைத்தல், தழுவியமைத்தல், பொருத்தியமைத்தல், உள்நாட்டு மயமாக்கல், சுதேச மயமாக்கல், பண்பாட்டு மயமாக்கல், சூழமைவுமயமாக்கல் போன்ற ஒன்றன் பின் ஒன்றாக இந்த ஆறு தசாப்தங்களிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதிய பலன்களை இன்று வரை தரவில்லை என்றே கூறவேண்டும். "பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப்போடும்" முயற்சியாக, "புதிய திராட்சை மதுவை பழைய தோற்பைகளில் ஊற்றி வைக்கும்" நடவடிக்கையாகவே இவை உற்சாகத்தோடு வரவேற்கப்பட்டு, விரக்தியோடு கைவிடப்பட்டன.

சீர்திருத்த விளக்கங்கள் தமிழ் மொழியில் திருவழிபாடு நடத்துவது பற்றியும் ஏனைய திருவழிபாட்டுச் சீர்திருத்தங்கள் தொடர்பாகவும், பல விளக்கக் கட்டுரைகள் பாதுகாவலனில் வெளியாகின. குறிப்பாக 1965இல் பல மாதங்கள் தொடர்ச்சியாக வெளிவந்த "திரு வழிபாட்டுச் சீர்திருத்தங்களின் மனப்பாங்கு" என்னும் சிறப்புக் கட்டுரையானது திருப்பலியின் பல்வேறு அம்சங்களை ஆழமாக விரித்துரைத்தது.

"தற்போது நிகழ்ந்து வரும் திருச்சடங்குகளைப் புதுப்பிக்கும் விடயத்தில் திருவழிபாட்டு நூல்கள், உருவாக்கங்கள், மாற்றங்கள் ஆகியவற்றிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துவதும் சரியல்ல. இதில் மூன்று அடிப்படையான கருத்துக்களை நாம் தெளிவாகக் காணலாம். கேட்கப்பட வேண்டிய தேவனின் வார்த்தை, எம்மத்தியில் அனுபவத்தில் உணரப்படவேண்டியதேவனின்வருகை, அன்பிலும் தோழமையிலும் ஒன்றுபடும் தேவனின் மக்கள், இம் மூன்று கருத்துக்களையும் மையமாகக் கொண்டிராவிட்டால்,காரியங்களைச்செய்வது புதியமுறைப்படியா அல்லது பழைய முறைப்படியா, மேல்நாட்டு முறைப்படியா அல்லது கீழ் நாட்டு முறைப்படியா? என்னும் அற்ப சச்சரவுகளால் திருவழிபாட்டுச் சீர்திருத்தமே கீழ்நிலையடைந்து விடும்" என்று 1965.05.22 இல் வெளிவந்த கட்டுரையில் கூறப்படுகின்றது.

தொடர்ந்து வரும் வருடங்களில் திருவழிபாட்டுச் சீர்திருத்தம் பற்றிப் பல கட்டுரைகள் வெளிவந்து மக்களை விழிப்புணர்வு கொள்ள வைத்தன. சிறப்பாக 1968.08.31இல் வெளிவந்த "திருநாட் கொண்டாட்டச் சீர்திருத்தங்கள்" என்னும் கட்டுரையானது 02ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு முற்பட்ட காலங்களில் யாழ். மறைமாவட்டத்தில் ஆலயத் திருவிழாக்களின் போது இடம்பெற்ற சாதிப் பிரச்சினைகள், பணபலப் போட்டிகள், பகைமை, சண்டைச்சச்சரவுகள், வீண் பணச் செலவுகள் போன்றவற்றை விட்டொழித்து எளிமையாக, ஒற்றுமையாகத் திருவழிபாடுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்கவேண்டும்என்றுவலியுறுத்துகின்றது.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

**மொழி மாற்றம்**

தமிழ் மொழியில் திருவழிபாடு நடாத்தப்பட்டமையே, முதலில் யாழ். மறைமாவட்டத்தில் இடம்பெற்ற பாரிய தொரு மாற்றமாகும். 02ஆம் வத்திக்கான் சங்கத்தின் முன்பு திருப்பலியில், நற்செய்தி வாசகமும், மறையுரையுங்கூட 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலத்தீன் மொழியில் இடம்பெற்றன. இக்காலத்தில் மறையுரையின் பின்பு "சுவிஷே விரித்துரை" என்னும் நூலில் இருந்து ஞாயிறு மற்றும் பிரதானமான திருவிழாக்களுக்கான நற்செய்தியும், அதற்கான விளக்கமும், சங்கிலித்தாம் அல்லது உபதேசியாரால் பீடத்திற்கு அருகில் நின்று தமிழில் வாசிக்கப்பட்டது. *(தொடரும்...)*



# இறைமீட்பின் தொடக்கமே இயேசுவைக் காணிக்கையாக அர்ப்பணித்த விழா

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து குழந்தையாக இருந்தபோது, காணிக்கையாக எருசலேம் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட நிகழ்வை பெப்ரவரி 2 ஆம் திகதி நாம் சிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

ஆண்டவர் இயேசுவின் ஆரம்பகால வாழ்வில் நிகழ்ந்த ஒரு முக்கியமான நிகழ்வு இது. பிப்ரவரி 2 என்றாலே நம் நினைவுக்கு வருவது மெழுகுதிரிகளோடு நாம் மேற்கொள்கிற பவனிதான். பெரும்பாலான ஆலயங்களில் கிறிஸ்து பிறப்பிற்கு 40 நாட்களுக்குப் பிறகு, ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நாள், திரு வழிபாட்டில் குறிப்பிட்டிருப்பது போல, இறையாசீர் மற்றும் மெழுகுதிரிப் பவனியோடு தொடங்கி, சிறப்பிக்கப்படுகின்றது. பொது உரோமை நாள்காட்டி புதுப்பிக்கப்படுவதற்கு முன்பாக இவ்விழா, கிறிஸ்து பிறப்புக்காலத்தின் இறுதி நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

சிமியோன் மற்றும் அன்னா இவர்களின் வார்த்தைகளின் வழியாக, கிறிஸ்து பாலன் 'மீட்பர்' என்ற உண்மையை வெளிப்படுத்துகிற இந்த நிகழ்வு இன்னொரு 'திருக்காட்சிப் பெருவிழாவாகக்' கருதப்படுகின்றது. இந்நாளில் நடைபெறும் இந்த மெழுகுதிரிப் பவனி, கிறிஸ்துவே உலகின் ஒளி என்பதை உலகிற்கு உரக்கச் சொல்கிறது. ஆலயத்தை நோக்கி நடைபெறும் இப்பவனியில், கிறிஸ்துவை வெளிப்படுத்திய சிமியோனின் வார்த்தைகள் அடங்கிய பாடல்கள் பாடப்படுகின்றன.

கத்தோலிக்க மற்றும் மரபு மாறாத் (Orthodox) திரு அவைகளில் ஆலயத்தை நோக்கிச் செல்கிற இப்பவனி, கிறிஸ்து பாலன் எருசலேம் ஆலயத்தை நோக்கிச் சென்ற நிகழ்வை நமக்கு நினைவுபடுத்துகின்றது. 1969 ஆம் ஆண்டு, கீழைத்திரு அவையினர் (Oriental Church) தொடங்கிய ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிற இவ்விழாவானது, மேற்கத்திய நாடுகளில் 'தாய் மரியின் தூய்மைச் சடங்கு நாளாக' கிறிஸ்து பிறப்புக் காலத்தின் முடிவில் கொண்டாடப்பட்டது.

கிறிஸ்து இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த நிகழ்வானது, லூக்கா நற்செய்தியில் 2 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்வைப் பற்றிய லூக்கா நற்செய்தியாளரின் விவரிப்பு, 'திருச்சட்டப்படி தலைப்பேறை அர்ப்பணிக்கிற சடங்கையும்', 'தூய்மைப்படுத்துகிற சடங்கையும்' இணைத்து நமக்குத் தருகிறது (லூக் 2:23-24). இங்கு, யோசேப்பும், மரியாவும் ஒரு சோடி மாடப்புறாக்கள் அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியாகக் கொடுப்பதன் வழியாக, ஏழைகளுக்கு உரிய காணிக்கையை (லேவி 12:8) அவர்கள் தெரிவு செய்தார்கள் என்பதை, லூக்கா நற்செய்தியாளர் வெளிப்படையாக எடுத்துரைக்கிறார். லேவியராகமம் 2:1-14 வரை உள்ள பகுதி, ஒரு ஆண் குழந்தை பிறந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு, இந்த அர்ப்பணச் சடங்கை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறது. அதன் அடிப்படையிலேயே இந்த நிகழ்வு கிறிஸ்து பிறந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால்தான், நமது உரோமைத் திரு அவை இந்நிகழ்ச்சியை மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளில் நான்காவது மறையுண்மையாகக் கொண்டிருக்கிறது.

எருசலேம் ஆலயத்தில் நடந்த இந்த அர்ப்பண நிகழ்வு லூக்கா நற்செய்தியில் மட்டுமே காணப்படுகிறது. பொதுவாகவே, லூக்கா நற்செய்தியாளர் ஆலயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவராக இருக்கிறார். உண்மையில் இவருடைய நற்செய்தி ஆலயத்தில் தொடங்கி, (ஆலயத்தில் செக்கரியா வானதூதரை சந்தித்தல்) ஆலயத்தில் நிறைவடைகிறது (இயேசுவின் உயிர்ப்பிற்கு பிறகு அவருடைய ஆலயத்திற்கு சீடர்கள் சென்று இடையறாது ஆண்டவரைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்). மேலும், இன்னும் பல இடங்களில் ஆலயத்தைப் பற்றிய குறிப்புகள் லூக்கா நற்செய்தியில் காணப்படுகின்றன.

பண்டைய இஸ்ரயேலர் வாழ்வில் ஏன் ஆலயம் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது? ஆலயம் என்பது ஆண்டவருடைய உறைவிடம், அது எல்லாம் வல்லவரை எதிர்கொள்கிற ஒரு தளம், கடவுளும் - மனிதரும் சந்திக்கிற ஒரு சந்திப்புக் கூடாரம். இறையும் - மனிதமும் ஒருங்கே சங்கமிப்பது ஆலயத்தில்தான். மனுக்குலம் இறைவழிக்குத் திரும்ப இவ்விடம் அவசியப்படுகின்றது. எப்போதெல்லாம் யாரேனும் ஒருவர் ஆலயத்தில் காணிக்கை செலுத்துகிறாரோ, அப்போதெல்லாம் அவர் தன் வாழ்வையும், மனதையும் மடைமாற்றி இறைவன்பால் திரும்புகிறார். இவ்வாறு, அவர் கடவுளோடு ஒப்புரவாகின்றார்.

ஆனால், இஸ்ரயேல் நாட்டின் யூத மக்களின் பாவங்கள் ஆலயத்தின் மேன்மைக்கும் மற்றும் புனிதத்திற்கும் ஆபத்தை வருவித்தது. எனவே, உண்மையில் மோசமானதால் பாவத்தின் நிலைமை மக்களின் நிமித்தமாக ஆண்டவரின் மாட்சி (செக்கீனா) ஆலயத்தை விட்டு நீங்கியது என்பதே இறைவாக்கினர் எசேக்கியேலின் கூற்றாகும். குறிப்பாக, இறைவாக்கினர் எசேக்கியேல் 8-11 வரை உள்ள பகுதியில், கடவுளின் மாட்சி முதல் ஆலயத்திலிருந்து (சாலமோனின் ஆலயம்) வெளியேறியதை, கி.மு 586 ஆம் ஆண்டில், எருசலேம் நகரும், ஆலயமும் அழிக்கப்பட்ட நிகழ்வின் ஆரம்பமாக எடுத்துக் காட்டுகிறார். ஆகவேதான், 'ஆண்டவரின் மாட்சி ஆலயத்தைவிட்டு நீங்கியது' என்ற இந்த வரிகள் ஒட்டு மொத்த விவிலியத்திலும் நாம் காண்கிறபோது அதிகம் கலக்கமுண்டாக்கும், பயமுறுத்தும் வரிகளாகக் கருதப்படுகின்றன. எனவேதான், இழந்த ஆண்டவரின் மாட்சியை திரும்பக் கொண்டுவர, அவரைப் புகழ உகந்த இடமாக எருசலேம் ஆலயத்தை மறுசீரமைப்புச் செய்யவேண்டும் என்பது, இஸ்ரயேல் மக்களின் தீராத வேட்கையாக எப்போதும் இருந்தது. இந்த ஏக்கத்தை இறைவாக்கினர்களின் வார்த்தைகளிலும், திருப்பாடல்களிலும் நாம் அதிகம் காணலாம்.

இதைத்தான் இந்த விழாவிற்கென்று நமக்கு தரப்பட்ட புத்தகத்திலிருந்து எடுக்க இன்றைய முதல் வாசகத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம், (மலா 3:1-4) "ஆண்டவர் சொல்வதாவது, நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார்". இவ்வாறு, ஆண்டவரின் மாட்சி மீண்டும் ஆலயத்தில் குடிகொள்ளும் என்று கூறுகின்றார். இந்தப் புரிதலோடு இந்நிகழ்வை நோக்குகிறபோது யோசேப்பும், மரியாவும் ஆண்டவர் இயேசுவை ஆலயத்திற்குக் கொண்டு வந்தபோது, மலாக்கி இறைவாக்கினர் உள்ளிட்ட மற்ற பல இறைவாக்கினர்கள் முன்னுரைத்த இறைவாக்குகள் நிறைவேறியதை நம்மால் காணமுடிகின்றது. அதாவது, ஆண்டவரின் மாட்சி அவரின் இல்லிடத்திற்கே திரும்பியது.

இதைத்தான் தூய உள்ளம் கொண்ட சிமியோன் காண்கின்றார். மெசியாவின் வருகையை ஆலயத்தில் அவர் காண்கின்றார், கடவுளின் உடனிருப்பை, அவரின் குடியிருப்பை, மக்கள் ஏக்கத்தோடு தேடிக்கொண்டிருந்த அந்த மாட்சியை அவர் காண்கின்றார். பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை சிமியோன் நன்கு அறிந்திருந்தார். மீட்பரைக் காணும் முன், அவர் இறக்கமாட்டார் என்ற உண்மையைத் தூய ஆவியார் அவருக்கு வெளிப்படுத்தி இருந்தார். அதனால்தான், குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தியதும் அவர் சொன்னார், 'ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச்செய்கிறீர். ஏனெனில், மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன." இந்தப் புகழ் பெற்ற வரிகளைத்தான் கத்தோலிக்கத் திரு அவையின் குருக்களுக்கான கட்டளை இரவுச் செபத்தில் நாம் தினந்தோறும் செபிக்கின்றோம்.

பலி செலுத்துகிறவரைப் போல், கடவுள் மனித வடிவில் ஆலயத்திற்கு திரும்பிவருகிறார். எதற்காக இந்தப் பலி? 'வீழ்ந்த மனிதத்தை இறைவனோடு ஒப்புரவாக்க', 'பாவக்கறை படிந்த மனிதத்தை இறைவனிடம் திரும்பக் கொண்டு வர' இந்த பலியை உண்மையாகவே அவர் நிகழ்த்திக் காட்டினார். இறைவனும், மனிதருமான இந்தச் சின்னக் குழந்தை இயேசு, தன் வாழ்வின் இறுதியில் மீண்டும் இந்த ஆலயத்திற்குள் நுழைந்து, தன் உடலைப் புதிய ஆலயமாக அறிவித்தார். பிறகு, மூன்று நாட்கள் கழித்து, கல்வாரியில் தனது இறுதிப் பலியை நிறைவேற்றி, சிலுவையில் தன்னையே ஒப்புக்கொடுத்துத் தந்தைக்கு தன்னையே அர்ப்பணித்தார். எனவே, இன்று நாம் கொண்டாடுவது கிறிஸ்துவின் முதல் அர்ப்பணத்தை. ஆனால், அவரது இறுதி அர்ப்பணம் நிகழ்ந்தது சிலுவை மரத்தில். கிறிஸ்து பிறந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு, எருசலேம் ஆலயத்தில் நிகழ்ந்த ஆண்டவரின் அர்ப்பணம் நிறைவடைந்தது கல்வாரி மலையில். அக்கல்வாரிப் பலியின் நினைவைத்தான் நாம் ஒவ்வொரு திருப்பலியிலும் கொண்டாடுகின்றோம். எனவே, நம் ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த இந்த நாள் நாம் கொண்டாட வேண்டிய நம் மீட்பின் தொடக்கம் என்பதில் ஐயமொன்றுமில்லை.

*நன்றி: நம்வாழ்வு*

**'ஆண்டவரே! உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச்செய்கிறீர். ஏனெனில், மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன'**



## பாப்பிறை திருப்பாலர் சபை



1843 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் என்பவர் திருப்பாலர் சபையை நிறுவினார். இவர் இளம் பராயத்திலிருந்து இயேசுவை ஆழமாக அறியவும், கிறிஸ்தவ நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும், சிறுவர்களை வழிநடத்தி, அவர்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்தவும், சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை இவர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதுமே இவரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன் வழியாகச் சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத் தூதர்களாக மாற்றவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார்.

# காவலன் கலசம்




### யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)

**கோயம்புத்தூரில் மறைபணியாளராகப் பணி**

(25.12.2022 இதழின் தொடர்ச்சி)

அப்போது ஏற்கனவே செமேரியா ஆண்டகையின் வருகைக்காகக் கொழும்பில் காத்திருந்த பொன்ஜீன் அடிகள் முதல் முறையாக அவரைச் சந்தித்ததிலிருந்தே மிக விரைவிலேயே ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டனர். இறைபராமரிப்பு யாழ்ப்பாணத்திருத்தூது மாவட்டத்திற்கு வழங்கிய மிகப்பெறுமதிமிக்க கொடையை பொன்ஜீன் அடிகள் என்ற குருவானவரின் பெயரில் வழங்கியமையைப் புரிந்துகொள்ள அதிக நாட்கள் எடுக்கவில்லை.

அமலமரித் தியாகிகள் துறவற சபையில் இணைவதற்கு முன்னாயத்தமாக நவசந்நியாச வாழ்வுப்பயிற்சியை மேற்கொள்ள நிறுவுநர் புனித யூஜின் டி மசனட் ஆண்டகை பொன்ஜீன் அடிகள் பிரான்சுக்குச்செல்ல அனுமதி வழங்கும் நிலையிலிருந்தாலும் பொன்ஜீன் அடிகளுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லாவிட்டால் அவர் தமது நவசந்நியாசப் பயிற்சியை யாழ்ப்பாணத்திலேயே செய்யலாம் என்று செமேரியா ஆண்டகை தமது விருப்பத்தை வெளியிட்டார். பொன்ஜீன் அடிகளும் ஐரோப்பா செல்லும் எண்ணத்தைக்கைவிட்டு யாழ்ப்பாணத்திற்கே சென்று அங்கேயே தமது நவசந்நியாசப்பயிற்சியை மேற்கொள்ள இணங்கினார். யாழ்ப்பாணத்தின் புதிய திருத்தூது முதல்வர் செமேரியா ஆண்டகையும்

அருட்பணி S.V.B. மங்களராஜா

அவரது குழுவினரும் 1857ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த போது அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. (ஆயர் பெற்றக்கீனி ஐரோப்பா சென்றபோது 1854ம் ஆண்டு கடும் சுகவீனமுற்று அதிலிருந்து முற்றாக விடுபடவில்லை. பின்னர் 1857ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம்திகதி போளவத்தையில் இறைவனடி சேர்ந்தார்.)

செமேரியா ஆண்டகையும் குழுவினரும் யாழ்ப்பாணம் வந்து ஒரு வாரத்தின் பின் 1857ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி பொன்ஜீன் அடிகள் செமேரியா ஆண்டகையின் நேரடி வழிநடத்தலின்கீழ் தனியொருவராகத்தமது நவசந்நியாசப்பயிற்சியை மேற்கொள்ளத்துவங்கினார். அந்நாட்களில் குறிப்பாக வெளிநாட்டு மறைத்தளங்களில் நவசந்நியாசப் பயிற்சியை மேற்கொள்ளும் போது அவர்கள் தமது வெளிக்களப் பணிகளை அல்லது செயற்பாடுகளை நிறுத்திவிடுவதில்லை அப்பயிற்சியானது ஒரு நவ சந்நியாசியின் துறவற நிலை, திருத்தூது வாழ்க்கை முறையை முழுமையாக வாழ்வதற்கான ஏது-நிலை ஏற்படுத்தப்படுவதால் பயிற்சி வழங்குபவர்கள் நவசந்நியாசியை நன்கு அறியக்கூடியதாயிருக்கும். இவ்வாறாக பொன்ஜீன் அடிகளும் தம்மை முழுமையாக இந் நவசந்நியாசப்பயிற்சிக்காலத்தில் பங்குப்பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியாதாயிருந்தது.

பொன்ஜீன் அடிகளார் வழி மீசாம் என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து கடற்கரையோரமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதோட்டப் பகுதி வரையுள்ள 30 மைல் நீள மான நிலப்பரப்பில் தமது நவசந்நியாச வாழ்வை ஆரம்பித்தார். யாழ் திருத்தூது மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான, பின்தங்கிய, படிப்பறிவில்லாத மக்களை கொண்ட பிரதேசம் இது தான். இம் மக்களுடைய வசதியீனங்களையும் குறை-பாடுகளையும் இவர் நேரடியாகவே அனுபவித்தார். சில வேளைகளில் இரவு முழுவதையும் ஒரு மரத்தின் கீழேயே தங்கவேண்டியிருந்தது. பொன்ஜீன் அடிகள் தான் கண்டதையும் அனுபவித்தவற்றையும் தமது நவசந்நியாச இயக்குனராகிய ஆயர் செமேரியா ஆண்டகைக்கு ஒரு அறிக்கை மூலம் அறிவித்தார். பின்னர் 1857ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி பொன்ஜீன் அடிகள் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டு அங்கு ஆயர் செமேரியா, சோர்ணாவெல் அடிகள், லெ பெஸ்கோ அடிகள், பூசின் அடிகள் ஆகியோரை உள்ளடக்கிய அமலமரித்தியாகிகள் சபையின் மகா ஞானொடுக்க மறையுரைஞர் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

**அமலமரித்தியாகிகள் சபையினர் இலங்கையில் முன்னெடுத்த முதல் பங்கு மகாஞானொடுக்கம்**

(இதனைப்பற்றி ஏற்கனவே பல மாதங்களுக்கு முன் வந்த இதழில் பார்த்திருக்கின்றோம்) அமல மரித்தியாகிகள் சபையினரால் இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட முதல் பங்கு மகா ஞானொடுக்கம் ஊர்காவற்துறையில் (Kayts) செப்டம்பர் 18ம் திகதி 1857ம் ஆண்டிலிருந்து அதே வருடம் ஒக்டோபர் 22 ம் திகதி வரையில் இடம் பெற்றது. இந்தப் புதுமையான நற்செய்தி அறிவிப்பு முறை தற்போதைய வழக்கில் கூறுவதாயிருந்தால் மறு நற்செய்தி அறிவிப்பு அல்லது புதிய நற்செய்தி அறிவிப்பு முறை (New Evangelization or Re Evangelization or 2nd Stage Evangelization) ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் அவ்வளவு வரவேற்பைப் பெறாது இருந்தாலும் இறுதியில் இதன் பயன்கள் பிரமிப்பூட்டு வகையாகவிருந்தன.

பங்கு மகா ஞானொடுக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வலிகாமம், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல இடங்களில் இடம் பெற்றன. இது போன்ற பங்கு மகா ஞானொடுக்கங்களின் வழியாகத்தான் பொன்ஜீன் அடிகளின் முழு ஆன்மீகத்தாகமும் வெளிப்பட்டது. இறைவன் இவருக்குக் கொடுத்த ஆற்றல்கள் எல்லாவற்றையும் இம்மகா ஞானொடுக்கங்களின் வெற்றிக்குப் பயன்படுத்தினார். *(தொடரும்....)*

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

**219. புனித பண்டங்களையோ அல்லது சுரூபங்களையோ நோக்கி நாம் செபிக்கின்றோமா?**

புனித பண்டங்களையோ, சுரூபங்களையோ நோக்கி நாம் செபிப்பதில்லை. காரணம் அவைகளால் பார்க்கவோ, கேட்கவோ, உதவிசெய்யவோ, முடியாது. ஆனால்அவை குறித்துக்காட்டுகின்ற புனிதர்களின் பரிந்துரையை வேண்டி நாம் செபிக்கின்றோம்.

**இரண்டாம் கட்டளை**

**220. இரண்டாம் கட்டளை என்ன?**

உன் இறைவனாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.

**221. இரண்டாம் கட்டளையால் நாங்கள் என்ன கட்டளையிடப்படுகின்றோம்?**

இரண்டாம் கட்டளையால் இறைவனுடைய பெயரையோ, புனித நபர்களையோ, புனித பொருட்களையோ பற்றி மரியாதையோடு பேசவும் எங்களது பிரமாணங்களையும் வாக்குறுதிகளையும் சட்ட பூர்வமாக்கிப் பாதுகாக்கவும் கட்டளையிடப்படுகின்றோம்.

**222. இரண்டாம் கட்டளை எவற்றைத் தடைசெய்கின்றது?**

இரண்டாம் கட்டளை பின்வருவனவற்றை தடைசெய்கின்றது: தேவையில்லாத பிரமாணங்கள், தேவதூஷணம், சபித்தல், அசிங்கமான, தடைசெய்யப்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் என்பனவற்றை ஆகும்.

**மூன்றாம் கட்டளை**

**ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.**

**223. மூன்றாம் கட்டளை என்ன?**

ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு.

**224. மூன்றாம் கட்டளையால் நாங்கள் பெற்றுக் கொள்ளும் கட்டளை என்ன?**

ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாகக் கடைப்பிடிக்க நாங்கள் மூன்றாம் கட்டளையால் கட்டளையிடப்படுகின்றோம்.

**225. எவ்வாறு ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்கலாம்?**

ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுவதனூடாகவும் உடல் சார்ந்த வேலைகளை விடுத்து ஓய்வெடுப் பதனூடாகவும் ஞாயிறு தினத்தை பரிசுத்தமாகக் கடைப்பிடிக்கலாம்.

**226. ஏன் நாம் உடலுழைப்பிலிருந்து ஞாயிறுதினத்தில் ஓய்வுபெறக் கட்டளையிடப்படுகின்றோம்?**

உடலுழைப்பிலிருந்து ஓய்வுபெற நாங்கள் கட்டளையிடப்படுகின்றோம். ஏனென்றால் அந் நாளில் செபிப்பதற்கும் அருளடையாளங்களைப் பெறுவதற்கும், வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கும் கிடைக்கும் நேரத்தையும் வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்திகொள்ளவேண்டும்.

**நான்காம் கட்டளை**

**227.நான்காம் கட்டளை என்ன?**

உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.

**228.நான்காம் கட்டளையால் நாங்கள் என்ன செய்யக் கட்டளையிடப்படுகின்றோம்?**

நான்காம் கட்டளையால் பாவம் தவிர்ந்த அனைத் திலும் எமது பெற்றோருக்குக் கீழ்ப்படியவும் அவர்களை அன்பு செய்யவும் அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்கவும் நாங்கள் கட்டளையிடப்படுகின்றோம்.

*(தொடரும்...)*

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

19

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**அத்தியாயம் 9**

**சமாளிக்கும் கிறிஸ்தவத்தை புதுப்பிக்க தமிழ் விடுதலை இறையியல் தோன்ற வேண்டும்**

**9.1 மறைபரப்பாளர்கள் 16 ஆம் நுற்றாண்டில் நாட்டிய ஐரோப்பிய திருஅவைகள் சுதேசிய வளர்ச்சி அடையத் தொடங்கின.**

16 ஆம் நுாற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட அல்லது மறு நடுகை செய்யபட்ட ஐரோப்பிய திருஅவைகள் கடந்த நூற்றாண்டுகளிலே, தமது சூழலின் பிரச்சினைகளுக்குத் தகுந்த பொருத்தமான முறையில் நடந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அதே நூற்றாண்டு களிலே ஆரம்பிக்கபட்ட இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, திரு அவைகள், இந்த நூற்றாண் டிலே, 2ஆம் வத்திகான் சங்கத்தின் ஊக்குவிப்புடன் விடுதலை இறையியல்களை பிறப்பித்திருக்கின்ற நிலையில் தமிழ் கிறீஸ்தவம், ஏன் விடுதலை இறையியலுக்குத் தயங்குகின்றது, என்ற சிக்கலான வினாவை ஆராய்வோம்.

16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளிலே பரப்பப்பட்ட உரோமன் கத்தோலிக் கத் திருஅவை, தமிழர் மத்தியில் மாத்திரமல்ல, இலத்தீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும், அந்நிய மண்ணிலும் மறு நடுகை (transplantation) செய்யப்பட்டது. மேற்கத்திய நாட்டுத் திருஅவைகளைப்போலே இருந்ததன் காரணமாக, அந்தந்த நாடுகளின் தனிப்பட்ட பிரச்சினைகளிற்கு இளம் திருஅவைகள் முகங்கொடுக்க, பதில் கொடுக்க இயலாமல் இருந்தன.

திருஅவையின் மனிதாபிமானப் பணிகள் நன்றாக இருந்தாலும், அன்பு, இரக்கம், காருண்யம், அடிப்படையில் குருக்களும், துறவிகளும், நல்ல மனிதாபிமானப் பணிகளைச் செய்தாலும், அவர்களின் கருத்துமுறைகள், படிப்பினைகள், போதனைகள், இன்னும் அந்நிய நாடுகளின் உருவத்திலேயே இருந்தன.

இதன் காரணமாக, தென் அமெரிக்க நாட்டு மக்கள் வட அமெரிக்காவின் அடிமைகளாகத் தொடர்ந்தும் வாழ்ந்தனர்.

ஆபிரிக்காவிலும் அடிமைகள் வியாபாரம் தொடர்ந்தது, வெள்ளையர்களின் முதலாளித்துவ வியாபாரங்கள் தொடர்ந்தன. வெள்ளையரின் முதலாளித்துவ அநீதி முறைகளைத் திருஅவைகள் மௌனமாக ஏற்றுக் கொள்வது போல் இருந்தது.

அந்தந்த நாடுகளின் சுதேச நிலைமையை, பிரச்சினைகளை, அவற்றின் மூல காரணங்களை உணர்ந்துகொள்ள தலைவர்களினால் முடியவில்லை. அவர்கள் ஸ்பானிய போர்த்துக்கல் நாடுகளிலிருந்து வந்த ஆயர்கள் குருக்கள் துறவியர் தமது பணிகளை தாய்நாட்டில் செய்தது போல் தொடர்ந்தும் செய்தனர்.

ஆனால் படிப்படியாக சுதேச குருக்களும், துறவிகளும், மண்ணின் மக்களாகக் கடந்த நூற்றாண்டில் அந்தந்த நாடுகளில் தோன்ற தொடங்கியதுடன், மக்களின் நிலைமைகள் கூடுதலாக அவதானிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டன.

படிப்படியாக தென் அமெரிக்க ஆயர்களும் குருக்கள் துறவிகளும் புத்துயிர் பெற்றவர்களாக மக்களுடைய அடிப்படை வாழ்வு பிரச்சினைகளைத் திருஅவைகளுக்குள் மேல் மட்டத்திலும் விவாதிக்கத் தொடங்கினர். அத்துடன் ஆயர் சங்கங்கள் தென் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் ஆரம்பிக்கபட்டு, உள்நாட்டு பிரச்சினைகளில் கூடிய கவனம் செலுத்த தொடங்கினர்.

(தொடரும்...)

# காவலன் கலசம்




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: இன்று எங்கு பார்த்தாலும் யாரைச் சந்தித்தாலும் பிரச்சினையாகவே இருக்கின்றது! இப்படிச் பிரச்சினைகள் உருவாகுவதற்கு என்ன காரணமோ?**

**ப:** சசி, அண்மையில் முகநூலில் படித்த ஒரு கூற்று என் நினைவுக்கு வருகின்றது: 'இந்த உலகில் முட்டாள்களாலும் பிரச்சினை இல்லை, அறிவாளிகளாலும் பிரச்சினை இல்லை! தன்னை அறிவாளி என எண்ணும் முட்டாள்களாலேயே பெரும் பிரச்சினை!' இதுவும் இன்றைய உலகில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்!

*(சரோசா, யாழ்ப்பாணம்)*

**கே: இன்று சில இளம் பெண்களும் ஆண்களும் ஆடையணிவதைப் பார்த்தால் வெட்கமாக இருக்கின்றது. அழகு என்ற பெயரில் அசிங்கமாக ஆடையணிகின்றார்கள். பொது இடங்களில் இருந்த இந்நிலை, கோவில்களுக்குள்ளும் வந்துவிட்டது. இந்நிலையை மாற்ற என்ன செய்யலாம்?**

**ப:** உங்கள் ஆதங்கமும் எனக்குப் புரிகின்றது. ஆடைகளை அணிபவர்களே வெட்கப்படவில்லையாம்! பிறகு, நீங்கள் ஏன் வெட்கப்படுகின்றீர்கள் சரோ அக்கா? உண்மையில், ஒவ்வொருவரும் தம் ஆடைத்தெரிவைச் செய்கின்றபோது அவர்கள்தான் அதில் கவனம் செலுத்தவேண்டும்! சில இடங்களில், சிலர் அணிந்து வந்திருப்பதைப் பார்க்கின்றபோது அவர்கள் அணியாமலே வந்திருக்கலாம் போலவும் தோன்றும்! என்ன செய்வது சரோ அக்கா! 'விதிப்பலன்' என்பார்களே! அதில் எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், இப்படி அரைகுறையாக ஆடையணிந்து வருபவர்களைப் பார்க்கின்றபோது, 'இவற்றையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைத்தது நம் விதிப்பலன்' என்றே எண்ணத் தோன்றுகின்றது! உண்மையில், சில இளையோர் அணிந்திருப்பது கிழிந்திருக்கின்றதா? கிழிக்கப்பட்டிருக்கின்றதா? அல்லது கிழிந்திருப்பதுதான் அந்த ஆடையின் சிறப்பா என்றெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கின்றது. அவ்வாறு கிளிக்கப்பட்டவைகள்தான் மிக உயர்ந்த விலைக்கும் விற்கப்படுகின்றதாம்..!

*(பற்றிக், யாழ்ப்பாணம்)*

**கே: அண்மையில் உங்களைப் பாதித்த ஒரு சிந்தனையைக் கூறமுடியுமா?**

**ப:** பற்றிக், 'ஒவ்வொரு முறையும் கர்ப்பம் தரிக்காமலேயே தாயாகிக் குழந்தைகளை பெற்றுக்கொள்கின்றேன். இப்படிக்கு, குப்பைத் தொட்டி' என்ற வாசகம்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: இவ்வாண்டு சுதந்திர தினத்திற்கு முன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு நாட்டை சரியான திசையில் கொண்டுசெல்ல அரசு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கின்றது, எனச் சொல்லப்படுகின்றது. சரிவரும் என நினைக்கின்றீர்களா?**

**ப:** ஆனந்தன், எங்கள் ஊரில் சொல்லப்படும் சில பழமொழிகள்தான் நினைவுக்கு வருகின்றன. "சுடுது மடியப் புடி" என்று இத்தனை ஆண்டுகாலப் பிரச்சினைக்கு சில நாள்கள்கூட முன்னாயத்தமில்லாமல் தீர்வைக் காண்பதென்பது, 'சிறியோர் செய்யும் வேளாண்மை' போன்றது! அதாவது "சிறியோர் செய்யும் வேளாண்மை வீடுவந்து சேராது." என்பது ஆன்றோர் வாக்கு.

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் சூடுபிடித்திருக்கின்றது. யாருக்கு, எந்தக் கட்சிக்கு வாக்களிக்கலாம் என நினைக்கின்றீர்கள்?**

**ப:** அருள், ஒரு நல்ல கேள்விக்கு, ஒரு நல்ல பதிலைச் சொல்லவேண்டும்! கண்ணதாசனின் வார்த்தைகளில் சொல்கின்றேன்: 'உன் ஓட்டு ஒரு யோக்கியனுக்கு விழுந்தால் உனக்கு எதிர்காலம்' அதுவே ஓர் அயோக்கியனுக்கு விழுந்தால் அவனுக்கு எதிர்காலம்.'

*(சித்தி, கொழும்பு)*

**கே: நாடு, மிக மோசமான நிலையில் போய்க் கொண்டிருப்பதை ஏன் நம் தலைவர்கள் உணர்கின்றார்கள் இல்லை!? இதற்கு யார் பொறுப்பு?**

**ப:** சித்தி, இவ்விடயத்தில்தான் மக்கள் சித்தியடையாமல் 'பெயில்' பண்ணுகின்றார்கள்! எவ்விடயம் தெரியுமா! ஒரு நாடு மோசமாய்ப் போவதும் நாசமாய்ப் போவதும் மக்கள் கைகளில்தான் இருக்கின்றது என்பதை மக்கள் எப்போது புரிந்து கொள்கின்றார்களோ அப்போது விடிவு ஏற்படும். இதனைத்தான், அமெரிக்க நாட்டு முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன், "தகுதியற்ற தலைவர்களால் ஒரு நாடு நாசமாய்ப் போவதில்லை, தகுதியற்ற தலைவர்களைக் தேர்ந்தெடுக்கும் மக்களாலேதான் அந்நாடு நாசமாய்ப் போகின்றது!" என்றார். சிந்தித்து தகுதியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க நமது வாக்குகளை அளிப்போம்.

# மகிழ்வோடு வாழ்வோம் பயிற்சிக்கான அழைப்பு

- ஆன்மீக வழிகாட்டல் பெறல்
- இளையோருக்கான வாழ்வியல் வழிகாட்டல் பெறல்
- உடல், உள நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்.
- இடைவிலகல் மாணவருக்கான தொழில் வழிகாட்டல்.
- பாதிப்படைந்த குடும்பங்களை மீள் இணைத்தல்.
- கைத்தொலைபேசி, போதை, மாத்திரைகள் போன்ற அமைத்துவங்களில் இருந்து விடுதலை பெறல்.
- உள சமூக ஈடுபாடுடைய சமூகப் பணியாளருக்கான உருவாக்கல் கற்கைநெறியில் பங்கெடுத்தல்.
- கிராமியப் பாசறைகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான உள சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் போன்றவற்றை முன்னெடுத்தல்.
- சிறியோர், முதியோர், நோயாளிகள் போன்றோருக்கு பராமரிப்பு நல்கல்.
- தெருவாசிகளுக்குப் புகலிடம் நல்கல்.

**தொடர்புகளுக்கு:**

அருட்பணி டேவிற் வி.பற்றிக்
நம்பிக்கை இல்லம், 835 நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல்: frvpomi@gmail.com
வலைத்தளம்: sites.google.com/view/change-charitable-trust/hom

## இயேசுவின் நினைவாய்ப் பணிகள் செய்வோம்

இறைமகன் இயேசுவின் சிந்தனை மனதில்
நிறைவாய் இருந்தால் நிச்சயம் நாமும்
துணிவு கொண்டு அவருடன் இணைந்து
நினைவாய்ப் பணிகள் ஆற்றிட முடியும்

வார்த்தையைப் பகிர்ந்து சாட்சியாய் வாழ்வதும்
எதிரியை அணைத்து மன்னிப்பு ஈய்வதும்
இல்லார்க்கு உதவி இன்பம் காண்பதும்
மீட்பராம் இயேசுவின் நினைவுப் பணிகளே

திறமையும் ஆற்றலும் பொதுவெனக் கொள்வதும்
தாழ்நிலை உறவினைப் பேணிக் காப்பதும்
உரிமைகள் கிடைத்திடக் குரல்தனைக் கொடுப்பதும்
அன்பராம் இயேசுவின் நினைவுப் பணிகளே

உண்மை நீதி நிலைத்திட உழைப்பதும்
வாழ்வின் சிலுவையைப் பொறுமையாய்ச் சுமப்பதும்
அடுத்தவன் வாழ என்னை இழப்பதும்
ஆண்டவன் இயேசுவின் நினைவுப் பணிகளே

வறியோர் வாழ்வு மேம்பட வாழ்வதும்
துன்புறும் மனிதரில் பரிவு கொள்வதும்
இறையாட்சி மலர உண்மையாய் இருப்பதும்
அன்பராம் இயேசுவின் உன்னதப் பணிகளே

அளவையூர் அமலன்

## பாரினில் பண்புடன் வாழ்வோம்

வலி சுமந்த எம்
வரலாற்றுப் பாதைகளில்
வேதனைகளோ
தொடர்கதையாகிவிட
இன்று பொருள் முதல்
வாதத்துக்குள் எம்
வாழ்வு சிதைக்கப்பட்டுக்
கொண்டிருக்கின்றது
இன்றைய
சீர்திருத்த வாதங்களின்
சதுரங்கப் போர்வைகள்
எல்லாம் சீர் செய்ய
வழிதேடும் இந்நிலையில்
நவீனத்துவப்
பொறிமுறைகளுக்குள்
பொசுங்கிப் போய்விட்ட
பெலவீனங்களிலிருந்து
இன்று படைத்தவனின்
பார்வை எமக்கு
வேண்டிக் கிடக்கிறது
கடந்துவிட்ட
பதுங்குகுழிகள் எல்லாம்
கடந்தவையாகிவிட்டதன்றோ
இனிப் பாரினில் நாம்
பண்புடன் வாழ
படைத்தவர் துணைகொண்டு
பயணிப்போம்.

எம்.யோண்பற்றிக்
சுன்னாகம்


## விண்ணக வாழ்வில் 3ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1947

உதிர்வு 03 . 02 . 2020



**அமரர் சவரிமுத்து ஆரோக்கியநாதர்**
(நிரந்தர மறையாசிரியர்)

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

இல. 76, புலோலி தெற்கு,
புலோலி.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

AD-07

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 06 . 1962

உதிர்வு 01 . 02 . 2022



**அமரர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (ராசா)**

"உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்" (யோவான் 11:26)

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
உற்றவரும் சுற்றமும்
கூடிக்களித்த உறவுகளை
விட்டுச் சென்றதேனோ? - உமது
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி - உம்
வரவை எதிர்பார்த்துத் துடிக்கின்றனவே
இறைத் தொண்டாற்றி
மறைவாழ்வு வாழ்ந்த - உம்
ஆன்ம இளைப்பாற்றிக்காக
என்றும் எம் செபங்கள் ஓயாது

AD-09

8ம் வட்டாரம், மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

பிரிவால் துயருறும்
அன்பான மனைவி

# கச்சை தீவு புனித அந்தோனியார் திருத்தலத் தவக்கால யாத்திரை



யாழ் மறைமாவட்டத்தின் முக்கிய திருத்தலங்களில் ஒன்றான கச்சைதீவு புனித அந்தோனியார் திருத்தல தவக்கால யாத்திரை எதிர்வரும் மார்ச் மாதம் 3ம், 4ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. கடந்த மூன்று ஆண்டு காலமாகப் பெரும் தொற்றுக்காரணமாக யாத்திரிகைகள் முழுமையாகப் பங்கெடுக்க முடியாத நிலையில் இவ்வாண்டு யாத்திரிகர்களின் முழுமையான பங்கேற்பில் திருநாள் கொண்டாடப்படத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திருத்தலத் திருநாளிற்காக முன்வைத்த கூட்டமானது யாழ் அரச அதிபர் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளாவன.

*இவ்வாண்டு இலங்கையில் இருந்து 4500 பக்தர்களும், இந்தியாவில் இருந்து 3500 பக்தர்களும் குருக்கள் துறவிகள் விசேட அதிதிகள் என 1000 பேரும் அனுமதிக்கப்படுவர். மார்ச் மாதம் 3ம் திகதி அதிகாலை 5.00 மணி முதல் 10.00 மணி வரை யாழ் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துசேவை குறிகட்டவானுக்கு இடம்பெறும். குறிகட்டுவானில் இருந்து படகுப் போக்குவரத்துப் பயணக்கட்டணமாக 2000/=வும், நெடுந்தீவில் இருந்து பயணப் போக்குவரத்து 1500/= அறவிடப்படும். யாத்திரிகர்கள் அனைவரும் கொவிட் தடுப்பூசி பெற்ற அட்டையைப் பயணத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும். மார்ச் 3ம் திகதி பயணிப்போர் தமக்கு வேண்டிய உணவு குடிநீர் என்பன எடுத்துச்செல்ல வேண்டும். மார்ச் 4ம் திகதி திருநாள் திருப்பலிக்குப் பின் அனைவருக்கும் உணவு வழங்கப்படும். மார்ச் 3ம் திகதி, திருச்செபமாலை, திருச்சிலுவைப்பாதை, திருப்பலி, நற்கருணை ஆராதனை என்பன நடைபெறும் மார்ச் 4ம் திகதி காலை 7.30 மணிக்குத் திருநாள் திருப்பலி நடைபெறும்.*

# புனித சூசையப்பர் ஆண்கள் விடுதி புதுக்குடியிருப்பில் திறந்து வைப்பு




புதுக்குடியிருப்புப் பங்கு எல்லைக்குட்பட்ட யாழ். திருஅவைக்கு சொந்தமான நிலப்பகுதியில் புதிதாக அமைக்கபட்டுவந்த புனித யோசப் ஆண்கள் விடுதிக் கட்டடத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அக்கட்டட திறப்பு விழா கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் முதல்வரும் புனித யோசப் ஆண்கள் விடுதியின் காப்பாளருமாகிய அருட்தந்தை றொபின்சன் யோசப் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து புதிதாக அமைக்கப்பட்ட விடுதியை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

மொன்றியல் தமிழ் ஆன்மீகப் பணியகம் மற்றும் **ONE CHILD FOUNDATION** நிறுவனங்களின் அனுசரணையில் சகல வசதிகளும் கொண்டமைந்ததாக இவ்விடுதி அமைக்கப்பட்டிருப்பதுடன் **ONE CHILD FOUNDATION** நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கான விடுதிகளைப் பல இடங்களிலும் அமைக்க உதவிபுரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் பொதுநிலையினர் எழுச்சி நாள்



பருத்தித்துறை மறைக்கோட்டப் பொது நிலையினர் கழக எழுச்சி நாள் கடந்த 28ம் திகதி கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

எழுச்சி நாள் "தன்னிறைவுடன் ஒன்றிணைந்து போதை விலங்கொடித்துப் பயணிப்போம்" என்னும் கருப் பொருளினைக் கொண்டதாக அமைந்தது.

இந்நிகழ்வில் அருட்பணி சா.ம.செல்வரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் மறைக்கோட்ட இயக்குநராகப் பணிபுரிந்த அருட்பணி பயஸ் இருதயதாஸ் அடிகளாருக்குப் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டது. இவ் எழுச்சிநாளில் அருட்பணியாளர்கள், துறவிகள், பொதுநிலையினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# செம்பியன்பற்றுப் பங்கில் மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பம்



மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. பங்குத்தந்தை அருட்தந்தை டியூக் வின்சன் அடிகளின் வழிநடத்தலில் செம்பியன்பற்றுத் திருஅவையின் முதற்குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு இறைபதடைந்த அருட்தந்தை ஜோண் லொறட் அடிகளின் பெயரில் இம் மாலை நேர வகுப்புக்கள் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் முதற்கட்டமாக தரம் 09, 10, 11 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

# இளையோர் ஆணைக்குழுக் கூட்டம்



யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழு கூட்டம் கடந்த 23ஆம் திகதி யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்வாண்டிற்கான இளையோர் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

# ஆணைக்குழுக்களின் புதிய ஆண்டுக்கான செயல்திட்டம் ஆயரிடம் சமர்ப்பிப்பு



யாழ். மறைமாவட்டத்தில் செயற்பட்டு வரும் மறைமாவட்ட ஆணைக் குழுக்கள் மற்றும் ஒன்றியங்களின் இயக்குநர்களுக்கான கூட்டம் கடந்த 23ஆம் திகதி ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்வருடத்திற்கான ஆணைக் குழுக்களின் செயற்பாட்டுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுக் கலந்துரையாப்பட்டன.

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வார வழிபாடுகள்



யாழ் கிறிஸ்தவ ஒன்றியமும் யாழ். மறைமாவட்ட றோமன் கத்தோலிக்க ஒன்றிப்புக்கான ஆணைக்குழுவும் இணைந்து முன்னெடுத்த ஒன்றிப்பு வார நிகழ்வுகள் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை யாழ். மறைமாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெற்றுள்ளன.

இவ்வொன்றிப்பு வார இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 18ஆம் திகதி சுண்டுக்குளி பரி. யோவான் ஆலயத்தில் நடைபெற்றது.

கத்தோலிக்க ஒன்றிய ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை செல்வரட்ணம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அருட்கலாநிதி பத்மதயாளன் ஆண்டகை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஒவ்வொரு வருடமும் இவ் ஒன்றிப்பு வார நிகழ்வுகள் ஜனவரி இரண்டு வாரங்கள் முன்னெடுக்கப்படுவதுடன் கிறிஸ்தவ சபைகள் ஒன்றாக இணைந்து பல நிகழ்வுகளை மேற்கொள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் கரோல் குழுப்பாடல் போட்டி



யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட மறைமாவட்ட ரீதியிலான கரோல் குழுப்பாடல் போட்டி கடந்த மாதம் 07ஆம் திகதி யாழ்.மறை நதி கத்தோலிக்க ஊடக மையத்தில் அமைந்துள்ள ஆயர் ஜஸ்ரின் கலையகத்தில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் தலைமையில் "போதை அடிமை விலங்கொடிக்கும் கிறிஸ்து பிறப்பு" என்னும் கருப்பொருளில் நடைபெற்ற இப்போட்டியில் மறைமாவட்ட ரீதியாக 13 பங்குகள் போட்டியிட்ட நிலையில் நாவாந்துறைப் பங்கு முதலாம் இடத்தையும், நவாலிப் பங்கு இரண்டாம் இடத்தையும், பாசையூர்ப் பங்கு மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# மிருசுவில் பங்கில் இளையோர் ஒன்றுகூடல்



மிருசுவில் பங்கிலுள்ள கச்சாய் புனித இராயப்பர் ஆலய இளையோர்களும் புனித செபமாலை மாதா ஆலய இளையோர்களும் இணைந்து முன்னெடுத்த புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத் திருவிழா கடந்த 22ஆம் திகதி கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை செபமாலைத்தாசர் சபை மாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயசீலன் அடிகள் தலைமை தாங்கி நிறைவேற்றினார். திருப்பலியின் நிறைவில் யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தினருக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெற்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.